1969 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த அதிகாரி அந்த விதமான நிதி கோரியதாகத் தகவல் இல்லை. அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் அவர் ஏதாவது கோரிக்கை விடுத்திருக்கிறாரா, அதுபற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பவற்றைத் தெரிவிக்கலாம்.

திரு. கே. போஜன் : எருமைப் பாலுடன் பசும்பாலைக் கலப்பது ஒரு குற்றமாகக் கருதப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கண்டிப்பாக. எருமைப் பாலின் விலை அதிகம், பசும் பால் விலை குறைவு. ஆகவே, பசும் பாலை எருமைப் பாலோடு சேர்த்து எருமைப் பால் என்று விற்பதினால் அதை வாங்கக்கூடிய பொது மக்கள் பாதிக்கப்படுவதால் இது குற்றமாகக் கருதப்படும்.

திரு. ஏ. ஆர் சுப்பையா முதலியார் : அடல்ட்ரேஷன் என்றால் கெடுதி இருந்தால்தான் அடல்ட்ரேஷன். பசும்பாலை எருமைப் பாலோடு கலப்பதால், அதை மக்கள் சாப்பிடுவதால் கெடுதி ஏற்படுவதில்லை. எனவே அடல்ட்ரேஷன் என்ற தன்மையில் அது வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பெர்சென்டேஜ், எந்த அளவிற்குக் கலக்கப்படுகிறது, அதனால் உடம்பிற்குக் கெடுதியா இல்லையா என்பதல்ல பிரச்னை. இங்குள்ள பிரச்னை கலப்படம் செய்யப்படுகிறதா என்பது. அப்படிக் கலப்படம் செய்வதால் அதிக வருவாய் தேடும் முயற்சியில் ஈடுபடுவதால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : As regards this new process of detecting the mixture of buffaloe's milk with cow's milk, is this being tested and if so how many culprits have been sent to Courts of Law and fined?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்கலாம்.

திரு. என். துரைபாண்டியன்: தலைவரவர்களே, பசும்பாலோடு நல்ல தண்ணீரைக் கலப்பதால் உடம்பிற்குக் கெடுதல் இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த முயற்சியில் கனம் அங்கத்தினர் அவர்கள் ஈடுபடாமல் இருக்க வேண்டும். அது பொதுமக்களுக்கு விரோதமான செயல். அப்படி யாராவது செய்தால் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

Family Planning Scheme

* 37 Q.—**THIRU N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether there is any proposal under consideration to introduce mobile sterilisation units in this State?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

* 38. *Q.*—THIRU GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether women promoters are to be appointed under I.U.C.D. schemes in hospitals; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட அல்லது கருத்தடை வளையங்களைப் பயன்படுத்தி வருகிற எழுதப் படிக்கத் தெரிந்த, நன்னடத்தையுள்ள மணமான மகளிர், கருத்தடை அறுவை சிகிச்சையை ஊக்கப்படுத்தும் பணியாளர்களாக நியமிக்கத் தகுதி பெறுவர்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட பெண் பிரசாரகர்களை நியமிப்பதன் மூலமாக குடும்பக் கட்டுப்பாட்டு வேலை நல்ல முறையில் வெற்றி பெற்றிருக்கிறதா? அது விஷயமாகப் புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதன் மூலமாக நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் அந்தப் புள்ளி விவரங்கள் என் கையில் இருக்கவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, பிரதம சுகாதார நிலையங்களின் மூலமாக மிகவும் வெற்றிகரமான முறையில் குடும்ப நலத் திட்டம் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியானால் பிரதம சுகாதார நிலையங்கள் தொடங்கப்படாத மற்ற ஒன்றியங்களிலும் அவற்றைத் தொடங்க மத்திய அரசின் நிதி உதவியோடு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்கான செலவினங்களைப் பூராவும் மத்திய அரசாங்கம்தான் ஏற்றுக் கொள்ளுகிறது. மேலும் விரிவுப்படுத்த இந்த அரசாங்கம் முனைந்து கொண்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM: What is the remuneration paid to these women promotors under the scheme of Intra-Uterine Contraceptive Device?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தப் பெண்களுக்கு, ஒரு தாய் கருத்தடை செய்துகொண்டால் ஒரு ரூபாய் வீதம் தரப்படுகிறது.